தினமலர் புதுச்சேரி 15-6-2012



# மக்கள் தொகை கணக்கெடுப்பு கருத்தரங்கம்






புதுச்சேரி மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்ககம், பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் ஆப் புதுச்சேரி இணைந்து நடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த கருத்தரங்கில், அண்ணாமலைக் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற புள்ளியியல் துறை தலைவர் ராஜகோபாலன் பேசினார். அடுத்த படம்: கூட்டத்தில் பங்கேற்ற ஆய்வாளர்கள் மற்றும் பேராசிரியர்கள்.

புதுச்சேரி, ஜூன் 15-

மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது கிடைத்த தகவல்கள் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்ககம் மற்றும் பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் ஆகியவை இணைந்து 2011ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தியது. இதில் பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

வீடுகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சமையல் எரிபொருள், விளக்கு வசதி, வீடுகளில் வசிப்பவர்களின் சொத்துக்கள் விபரம் என அனைத்து விபரங்களும் பதிவு செய்யப்பட்டன. கணக்கெடுப்பு மூலம் கிடைத்த தகவல்கள் அனைத்தும் கடந்த மார்ச் 29ம் தேதி வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில் கிடைத்த தகவல்களைக் கொண்டு, புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மற்ற மாநிலங்களுடன் புள்ளிவிவர அடிப்படையில் ஒப்பிட்டு கருத்து தெரிவிக்கும் கருத்தரங்கம் நேற்று காலை பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் வளாகத்தில் நடந்தது.

கருத்தரங்கை, மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்கத்தின் இயக்குனர் கோபாலகிருஷ்ணன் தொடக்கி வைத்தார். பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் இயக்குனர் பியர் கிரார் வரவேற்று பேசினார்.

கருத்தரங்கில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மக்களின் அடிப்படை தேவையான குடிநீர், மின்சாரம் ஆகியவை தொடர்பான புள்ளி விபரங்கள் குறித்து அண்ணாமலைக் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற புள்ளியியல் துறை தலைவர் ராஜகோபாலன் பேசினார்.

கட்டுமானப் பொருட்கள் நிலவரம் பற்றி புதுச்சேரி புள்ளியியல் துறையின் உதவிப் பேராசிரியர் திருப்பதி ராவ், குடியிருப்பு வீடுகளின் தரம் குறித்து புதுச்சேரி பல்கலைக்கழக புள்ளியியல் ஆராய்ச்சியாளர் குமார பாண்டியன், சமையல் எரிவாயு குறித்து பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை உதவி பேராசிரியர் நிர்மலா ஆகியோர் பேசினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்க உதவி இயக்குனர் வெங்கடேஸ்வர ராவ் நன்றி கூறினார்.